# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**<u>ஆணை நாள் 08.04.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 3326/B/2025</u>**

திரு. K. கோபிநாத் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திருவள்ளூர்-602001. ... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தால் (08.04.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு.K.கோபிநாத் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி.ஜே.ஜூலியட் புஷ்பா, முதன்மை மாவட்ட நீதிபதி, திருவள்ளூர் அவர்களின் பிரதிநிதியாக திரு.E.R.புருஷோத்தமன், தலைமை எழுத்தர் (நிர்வாகம்) (பொறுப்பு பணி), முதன்மை மாவட்ட நீதிபதி, திருவள்ளூர் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 18.02.2025 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)-ன்கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு (08.04.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மனுவானது மனுதாரர் 09.10.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 04.12.2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

5. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

> இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர், மனுதாரர் திரு.கோபிநாத் அவர்கள் அவருடைய பாட்டி திருத்தணி முன்சீப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 1975 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் நடத்தப்பட்ட வழக்கு விவரங்களை கோரியிருந்ததாகவும், 1975 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் நடைபெற்ற வழக்கு விவரங்களை அறிந்துகொள்ள சம்பந்தப்பட்ட திருத்தணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு சென்று மெமோ தாக்கல் செய்து வழக்கு பதிவேட்டை பார்வையிட அனுமதி கோரி, வழக்கு

பதிவேட்டை பார்வையிட்டு, அவரது பாட்டியார் தாக்கல் செய்த வழக்கு விவரத்தை அறிந்து கொள்ளலாம் என்றும், திருத்தணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சென்று அங்கு தலைமை எழுத்தரை சந்தித்து வழக்கு பதிவேட்டை பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஆணையத்திடம் தெரிவித்த காரணத்தினால், மேல்முறையீட்டாளர் 09.10.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள 1975 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் நடத்தப்பட்ட வழக்கு விவரங்களை பெற்றுக்கொள்வதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 5(5)-இன்படி பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உதவிடவேண்டுமென்று உத்தரவிடப்பட்டு இந்த மனு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3326/B/2025</u>**
**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   முதன்மை மாவட்ட நீதிபதி,
   முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
   திருவள்ளூர்-602001.

2. மேல்முறையீட்டாளர்,
   Mr.K.Gopinath,
   No.3-94/1, Old Airport Road,
   Opp.CWC Godown. Lakshmipuram,
   Kothapalem Village, Renigunta Mandal,
   Tirupathi,
   Andra Pradesh-517520.
   Cell.8919220496.

Copy to: File. GP PC
08.04.26